REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 6உ வியாழன் (21—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 7உ வெள்ளி (22—11—57) [இதழ் 137

மாணவரே இல்லாத மக்கள் கல்லூரி

போபால், நவ. 19—

மாணவர்களே இல்லாத கல்லூரி ஒன்று மத்திய பிரதேசத்தில் இருக்கிறதாம்! சாஞ்சி எனும் இடத்தில் மக்கள் கல்லூரி (ஜனதா கல்லூரி) என்ற பெயர் கொண்ட கல்லூரியில் தலையாயர் ஒருவரும், விரிவுரையாளர் இருவரும் இருக்கின்றனராம்; ஆனால், அதில் மாணவர்கள் எவரும் இல்லையாம்! இந்தத் தகவலை, மத்திய பிரதேச சட்டசபையில் மாநிலக் கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

'மாப்பிள்ளை மார்க்கெட்' மூடப்படும்

ஆணுக்கு விலைபேசும் அநாகரிக முறைக்கு வேட்டு

'வரதட்சணை' கேட்பது-கொடுப்பது தண்டனைக்குரிய குற்றங்களாகின்றன

ஆந்திர மாநிலத்தில் சட்டம் நிறைவேறியது

ஐதராபாத், நவ. 20—

வரதட்சணை முறைக்கு எதிராகச் சட்டம் கொண்டுவரும் பெருமையை ஆந்திர மாநிலம் பெறுகிறது.

வரதட்சணை விலக்கு மசோதா ஒன்றினை ஆந்திர சட்டசபை இன்று நிறைவேற்றியுள்ளது.

மசோதாவினை, திருமதி அம்மண்ண ராஜா கொண்டுவந்தார். இதன் கர்த்தா இப்போது சபைத் தலைவராயிருக்கும் ஏ. காளேசுவர ராவ் ஆவார்.

ஆந்திரப் பிரதேச மாநிலம் அமைந்த பிறகு நிறைவேற்றப்படும் முதல் தனி நபர் மசோதா இது தான்!

மசோதா நிறைவேறிய போது சபை முழுவதும் ஆரவாரித்து, மசோதாவின் கர்த்தாவைப் பாராட்டியிருக்கிறது.

இந்த மசோதாவின்படி, வரதட்சணை கேட்பதும், வாங்குவதும், கொடுப்பதும், அதற்காகப் பேரம் பேசுவதும் ஆறு மாத சிறைத் தண்டனை அல்லது ரூ. 1,000 அபராதம் அல்லது இரண்டும் விதிக்கக்கூடிய குற்றமாகும்.

இனிமேல் விடப்படும் செயற்கைச் சந்திரன்

பூமிக்குக் கொண்டுவரப்படும்?

மாஸ்கோ, நவ. 21—

இனி விடப்படும் செயற்கைச் சந்திரனை மீண்டும் பூமிக்குக் கொண்டுவர ரஷ்ய விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனராம்!

இரண்டாம் திட்டத்தின் அலங்கோலம்

மக்கள் சபையில் பலத்த கண்டனம்

பண்டிதரின் குழப்பம் பற்றி விளக்கம்

புதுடில்லி, நவ. 20—

டெல்லியின் ஐந்தாண்டுத் திட்ட அவலட்சணம் பற்றியும், அலங்கோலம் பற்றியும் மக்கள் சபையில், பல கட்சி உறுப்பினர்களும் கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

பண்டிதருக்குப் பிறகு பேசிய பி. சோ. தலைவர் ஆச்சாரியா கிருபளானி, குறிப்பிட்டதாவது:—

"திட்டம் விஞ்ஞான ரீதியாகத் திட்டப்படவில்லை; ஒரு புள்ளிவிவர நிபுணரின் மேல் பார்வையிலேயே எல்லாத் திட்டங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன.

"உணவு உற்பத்தித்துறையைப் பொறுத்துங்கூட சரியான கணக்குகள் எடுக்கப்படவில்லை; விளைவாக, இன்று உணவு நிலைமை படுமோசமாக இருப்பதைப் பார்க்கிறோம்.

"திட்டம் விஞ்ஞான ரீதியாக இல்லை என்ற உடன், திட்டத்திலிருந்து ஒரு இரண்டாண்டு கால ஓய்வு பெறுவதினால் தவறு என்ன என்று மக்கள் சந்தேகிக்கவே செய்வர். இந்த யோசனையை முட்டாள்தனமானது— அபத்தமானது என்கிறார் பண்டித நேரு; ஆனால், திட்டங்கள் இன்றியே முன்னேறிய நாடுகள் ஏராளமாக இருக்கின்றன. திட்டமிட்டு முன்னேற முற்படுகிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளை விட ஏராளமான மேற்கு ஐரோப்பிய நாடுகள், திட்டமிடாமலே அதிகமாக முன்னேறத்தான் செய்கின்றன.

"திட்டமிடுவதற்குத் தேவையான அதிகபட்ச கட்டுப்பாடு, அதிகபட்ச ஒழுங்குமுறை, அதிகபட்ச சிக்கனம்—இந்த மூன்று நிபந்தனைகளையும் இந்தியா இன்று பூர்த்திசெய்ய முடியாது.

"திட்டத்தின் பிரதான அம்சங்களைக் காப்பாற்றுவதற்கே சர்க்கார் கஷ்டப்படுகையில், சிறுசிறு விவகாரங்களுக்கெல்லாம் முக்கியத்துவம் தரப்படுவது விசித்திரமானதாகும்."

தொடர்ந்துபேசிய கிருபளானி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"திட்டம்பற்றி விவாதிக்கப்படும் இத்தருவாயில், பிரதமர் நேரு அவர்கள், திட்டத்தினை எவ்வாறு நிறைவேற்றப்போகிறார்கள்—அதற்கான வழிவகை என்ன—நமது சக்திக்கும் ஆற்றலுக்கும் ஒப்ப திட்டம் வெட்டப்படுமா, அல்லவா என்பதுபற்றி எல்லாம் விளக்க

(4-ம் பக்கம் பார்க்க)

உணவு நெருக்கடிக்கு பண்டிதர் தரும் விசித்திர விளக்கம்

சாவோர்தொகை குறைந்து வருகிறதாம்

நெடுநாள்வாழ்வோர் தொகை அதிகரிக்கிறதாம்

திட்டத்தின் தோல்வியை மறைக்க பண்டிதர் தந்திரம்

உணவு நெருக்கடிக்கு, பண்டித நேரு விசித்திரமானதோர் வியாக்கியானம் தந்திருக்கிறார்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான திட்டங்கள், தேவையைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டிருக்கும் அலங்கோலத்தினை மறைக்க இந்த வியாக்கியானத்தை ஒரு திரையாகப் பயன்படுத்த முற்பட்டிருக்கிறார், இரண்டாம் திட்ட விவாதத்தின்போது, அவர்!

இந்தியாவில் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்லவாம்—உட்கொள்ளப்படும் உணவும் சராசரியாக அதிகரித்திருக்கிறதாம்!

"மக்கள் தொகை சாதாரணமாக அதிகரித்துவருகிறது என்றாலும், பொதுவான உடல்நல அபிவிருத்தியும், மக்கள் தொகை பெருக்கத்திற்குக் காரணமாயிருக்கிறது" என்றும் அவர் கூறினாராம்!

வங்கம் மற்றும் சில பிரதேசங்கள் பல தலைமுறைகளாக மலேரியாக் காய்ச்சலால் தாக்கப்பட்டு வந்தனவாம்; ஆனால் இப்போது, மலேரியா படிப்படியாக ஒழிந்துவருகிறதாம்! ஒருவர் எண்ணிப்பார்க்கக்கூடியவற்றுள் எல்லாம், இதுதான் மக்கள் வாழ்வைப் பொறுத்த ஒரு பெரும் புரட்சியாம்! இதனால் சாவோர் தொகை குறைந்துவருவதுடன், அதிக நாள் வாழ்வோர் தொகை அதிகரித்து வருகிறதாம்!

கடந்த கணக்கெடுப்பின் போதுநமது மக்கள் தொகை ஆண்டுதோறும் 1·5 சதவிகிதம் கூடுதலாகியிருப்பதாகக் கணக்கிடப்பட்டது; இந்த சதவிகிதம் இப்போது கிட்டத்தட்ட 2 ஆக உயர்ந்திருக்கிறதாம்!

"எனவே, இந்த நிலையை நாம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது—அல்லது அதிக உணவு உற்பத்தி—அல்லது, இரண்டின் மூலமும் சமாளிக்க வேண்டும். அதனால்தான் இதுபோன்ற பிரச்சினைகளைச் சமாளிக்க, குடும்பத் திட்டம் அல்லது பிள்ளைப்பேறு கட்டுப்பாடு அவசியம் என்று கருதுகிறோம்"

என்றும், பண்டிதர் கூறினாராம்!

தனிப்பட்டோரின் தன்மானம்

'பிறர் உதவியை நாடாமல் இருப்பதில் அடங்கியுள்ளது'

பண்டித நேரு கூறுகிறார்

"வேலை செய்ய சக்தி உள்ளவர்களுக்கு எப்போதும் ஏதாவது ஒரு வேலை தரப்பட வேண்டும்.

"தனிப்பட்ட நபரின் சுயமரியாதை, அவர் பிறர் உதவியை நாடாமல் இருப்பதில்தான் அடங்கியுள்ளது. எனவே, பஞ்சப் பகுதியில் எல்லோருக்கும வசதியளிக்கும் வகையில் கஞ்சித் தொட்டிகளை திறவக்கூடாது"

என்று பண்டித நேரு மக்கள் சபையில் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டிற்கு அடுத்த கவர்னர் யார்?

புதுடில்லி, நவ. 20—

தமிழ்நாட்டின் அடுத்த கவர்னராக யாரை நியமிப்பது என்பது பற்றி பலமான பேச்சு அடிபடுகிறது என்றாலும், இன்னும் உறுதியாக அடுத்தவர் யார் என்பது பற்றி நிர்ணயமாகவில்லையாம்!

கேரளத்தில் கவர்னராயிருக்கும் டாக்டர் பி. இராமகிருஷ்ணராவ் இங்கு வந்திருந்தபோது, தான் சென்னைக்குச் சென்றுவிட விருப்பம் தெரிவித்ததாகவும், ஆனால் அவரது விருப்பம் நிறைவேறாது என்றும் கூறப்படுகிறது.

ஜெனரல் கரியப்பா, இராஜகுமாரி அமிர்தகௌரி ஆகிய இருவர் பெயர்களும் அடிபடுகின்றனவாம்!

தோழர் பொன்னம்பலனர் தாயகம் திரும்பினர்

அண்ணு, பொதுச்செயலாளர், மற்றும் பலர் துறைமுகத்தில் வரவேற்றனர்

சென்னை, நவ. 21—

கடந்த ஆறு மாதமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமுதாயக் கருத்துக்களையும், கழகம் ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டினையும் மலேயாவாழ் தமிழ் மக்களிடையே விளக்கியும், கழக சமுதாயக் கருத்துக்களை மலேயாவாழ் திராவிடப் பெருங்குடி மக்கள் பின்பற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் பிரச்சாரப் பணியாற்றி வந்த தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் நேற்று காலை தாயகம் வந்தடைந்தார்.

இத்திங்கள் 12-ம் நாள் மலேயாவிலிருந்து புறப்பட்ட 'ஸ்டேட் ஆப் மதராஸ்' என்ற கப்பலில் நேற்று தலைநகர் வந்து சேர்ந்த தோழர் அ. பொன்னம்பலனர் அவர்களுக்கு, அண்ணு அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., கே. ஏ. மதியழகன், இரா. செழியன், டபிள்யூ. கே. தேவராசன், திருச்சி-என். சாம்பு, இரா. சௌரிராசன், வெ. கிருஷ்ணமூர்த்தி, ஆர். எஸ். பாண்டியன், டி. கே. பொன்னுவேலு, காஞ்சி-பாபு, எம். கே. கோவிந்தராச பாகவதர், முத்தாரமன், ஏழுமலை, 'திராவிடன்'-சோமு, டி. கே. எஸ். குழுவினர்களான டி. கே. சண்முகம், டி. கே. பகவதி, கருப்பையா ஆகியோரும், மற்றும் பல அரிய நண்பர்களும், கழகத் தோழர்களும் மலர் மாலைகள்—கைத்தறி ஆடைகள் அணிவித்தும் அகமலர்ந்த இன்முகத்தோடு கரங்குவித்தும் சிறப்பான முறையில் வரவேற்றார்கள்.

தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள், தன்னை வரவேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தோழர் பொன்னம்பலனர் அவர்களுக்கு மலர் மாலைகளும்—கைத்தறி ஆடைகளும் அணிவித்து கிளைக் கழகங்கள்—சார்பு மன்றங்கள் பலவும் வரவேற்றன.

திருச்சி - மேலக்கற்கண்டார் கோட்டை தி.மு. கழகம்—சி.எஸ். இராசு; வ. ஆ. மாவட்டம் திமிரி தி. மு. கழகம்—கந்தசாமி;

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. நாளிதழ் [illegible] ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—11—57 வியாழன்

மனச்சாட்சிக்கு ஒரு வேண்டுகோள்

தென்னவரை ஆளும் அதிகாரம், எழுதப்பட்டுள்ள இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாற்றில் வேறெப்போதும் இல்லாத வகையில், கடந்த பத்தாண்டுக் காலமாக வடவரின் கையில் சிக்கியுள்ளது; இந்த பலம் கொண்டு அவர்கள் தங்களது வாழ்க்கை நலன்களைப் பெருக்கிக்கொள்ளவும், இல்லாத பெருமைகளை இருப்பதாகச் சொல்லிக் கொள்ளவும் முற்படுகின்றனர். இதற்காக, தென்னவரின் வாழ்வையும் வளத்தையும் சூறையாடுகின்றனர், சுரண்டுகின்றனர் என்பதுடன், திராவிடரின் பண்பாட்டுத் தனிப் பெருமையையும், அவர் தம் வீரமிகு வரலாற்றுச் சிறப்பினையும் சிதைத்து ஒழித்துவிடுவதில் மூர்க்கத்தனமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்த ‘ஏக இந்திய’ ஏகாதிபத்திய வெறிச்செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளியிட்டு, தாங்கள் இழந்துவிட்ட அரசுரிமையைப் பெறவேண்டும்; அப்போதுதான், தொன்மைச் சிறப்பும் பெருமையும் கொண்ட தங்களின் பண்பாடு வரலாறு இவை அழியாமல் காப்பாற்றப்படவும், மேலும் செழுமையுறவும் முடியும்; வாழ்வும் சுதந்திரமானதாய் முழுமை பெற்றதாய் விளங்கும் என்று திராவிடர் கருதுகின்றனர்.

அவர்களது இயற்கையான இந்த விடுதலை உணர்வின் எழுச்சி வடிவம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த விடுதலை உணர்வை எல்லா மக்களும் பெறவேண்டுமென்பதற்காகக் கழகம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் வெற்றிமுடி தரித்துவருகின்றன; விடுதலை உணர்வுபெற்று இலட்சிய சித்திக்காகத் தங்களை ஒப்படைப்போரின் தொகை நாளும் வளர்ந்துவருகிறது.

நமது இந்த இலட்சியம், இயற்கையானது — நியாயமானது என்பதை மட்டுமின்றி, ஈடேறியே தீரவேண்டிய அவசியமானது என்பதையும் கடந்த பத்தாண்டுக்கால அனுபவத்தில் நிறைந்திருக்கும் கசப்பு தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

டெல்லி சர்க்காரின் எல்லா ‘அகில இந்திய’ நடவடிக்கைகளிலும், தென்னாட்டை வஞ்சிக்கும் ஏகாதிபத்திய குணவிசேஷம் வெளிப்படையாகவே உருவம் காட்டியிருப்பதை நாம் அடையாளம் காட்டத் தவறியதில்லை. தென்னாட்டவரின் செலவில், வடவரின் வாழ்வுக்கு மெருகு பூசப்படுகிறது என்பதை டெல்லியே கூடத் துணிவுடன் மறுத்ததில்லை.

ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டங்களில், தென்னாட்டவரின் பங்கு, பார்வையாளர், வரி செலுத்துவோர் என்ற அளவுடன் சரி; அத்தனையும் வடநாட்டவரின் வாழ்வுக்கு புதிய இன்பங்களைக் கொண்டுவந்து சேர்க்கவே என்பதை, மறுத்துரைப்போர், மனச்சாட்சியை விற்றுவிட்டவர்களாகத்தான் இருப்பர்.

இந்த அநீதிக்கு எதிராக நாம் குரல்தரும்போது, சிலரது குறுகிய புத்திக்காரர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்படுகிறோம். அந்தச் சிலரில், இந்த நாட்டுக்காரர்களும் உள்ளனரே என்பதில்தான் நமது கவலை, வருத்தம் எல்லாம்.

வடக்கு வாழ்கிறது—வளருகிறது; தெற்கு தேய்கிறது—தேம்புகிறது என்று பேசுவது குறுகிய புத்தி; பிரதேச வெறி; பாசீசம் என்றுகூட ‘அகில இந்தியா’க்கள் பேசுகின்றனர்.

வடநாட்டின் வளர்ச்சிக்கு, திராவிடர்கள், தங்களது வாழ்வையும் வளத்தையும் மகிழ்ச்சியோடு தந்துவிட்டு ‘இந்தியா’ வளருகிறது என்று பேசுவதுதான் பெருமை என்று, இங்குள்ள அகில இந்திய தாசர்கள் கருதுகின்றனர்—அடிக்கடி எழுந்து உண்மையை உணரத் தூண்டும் தங்களின் மனச்சாட்சியை வெற்றி பெறுமல் இவர்கள் நெடுநாளைக்கு அடக்கி வைத்திருக்கமுடியாது என்று நம்புகிறோம். அவர்களின் மனச்சாட்சிக்கு மேற்கு வங்கச் செய்தி ஒன்று ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

‘நிதிக் கமிஷன் சிபாரிசுகள், மேற்கு வங்கத்திற்கு அநீதி இழைத்துவிட்டன. வருமான வரியில் ஒரு பங்கினை மாநிலங்களுக்குப் பங்கிட்டுத் தருவதில் மக்கள்தொகை அடிப்படையைக் கொள்வது தவறாகும். இந்தியாவின் மொத்த வருமான வரி வசூலில், மேற்கு வங்கம் 35 சதவிகிதம் அடங்கியிருக்கிறது. சிபாரிசுகளின்படி கிடைப்பதோ 10 சதவிகிதம்தான் என்று மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய் கூறியிருக்கிறார். இந்த அநீதியைக் கண்டிப்பதில் எதிர்க்கட்சித் தலைவரும் கம்யூனிஸ்டுத் தலைவருமான ஜோதி பாசுவுடன் முதன் மந்திரி தோளோடு தோள் நிற்கிறார்.”

இது மேற்கு வங்கம் தரும் செய்தி.

இங்குள்ள அகில இந்திய தாசர்களின் மனச்சாட்சிக்கு இச்செய்தி விடுக்கும் வேண்டுகோள் இதுதான் :—

வடநாட்டவர் என்ற முறையில் மேற்கு வங்கத்தவர் டெல்லி சர்க்காரின் பரிபூரணமான அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமாகியிருக்கின்றனர். அபிவிருத்தித் திட்டங்களுக்கும் குறைவே இல்லை, தொழில் வளம் பெருக ஏற்பாடுகளும் ஏராளம். வங்க அகதிகளுக்காக, கோடிக்கணக்கில் அள்ளித் தரவும் டெல்லி தயங்கியதில்லை. என்றாலும், வருமான வரிப் பங்கு மக்கள் தொகை அடிப்படையில் தரப்படக் கூடாது என்று கேட்கின்றனர்.

நாம் தரும் வரிப் பணம் யாருக்கோ போகவில்லையே; நமது பாரத மக்களுக்குத்தானே செலவிடப்படுகிறது; நாம் அனைவரும் இந்தியர்தானே, அகில இந்தியாவிலுமாக, நமது வரிப் பணம் எங்கு செலவிடப்பட்டால்தான் என்ன? என்ற ‘பாரத மனம்’ மேற்கு வங்கத்தவருக்கு இல்லையே. நாங்கள் தருவது மொத்தத்தில் 35 சதவிகிதம்; கிடைப்பதோ பங்குப் பணத்தில் பத்து சதவிகிதம் தானே, இது அநீதியல்லவா? என்று பேசுவது உங்கள் ‘அகில இந்திய’ அகராதிப்படி குறுகிய புத்தியல்லவா, பிரதேச வெறியல்லவா? பாசிசம் அல்லவா? இந்திய ஒற்றுமைக்கு விரோதம் அல்லவா?

பின் ஏன் ராயும் பாசுவும் பேசுகிறார்கள் அப்படி? சிந்தித்துப் பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள்! என்று, அகில இந்திய தாசர்களின் மனச்சாட்சியே! இடித்துரைப்பாய்!”

‘வீண்பழி சுமத்தி கல்வித்துறையில் தலையிடாதீர்’

ஏ. இலட்சுமணசாமி அறிவுரை

திருச்சி, நவ. 20—

“பல்கலைக்கழகம் மிகவும் தனித்தன்மை வாய்ந்தது. அதன் வேலைகளில் யாரும் தலையிடக் கூடாது.

“பல்கலைக்கழகம் சர்வாதிகாரமாக நடைபெறுகிறது என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள்; அது தவறாகும். பல்கலைக்கழகங்கள் சனநாயக அடிப்படையில் நடைபெறுவதை அதன் கூட்டங்களில் வந்து காணலாம்.

“பல்கலைக்கழகங்களுக்கு அளிக்கப்படும் மானியத்திற்கு நிபந்தனையிருக்கக்கூடாது. அவசியமில்லாமல் பல்கலைக்கழக விஷயங்களில் தலையிடுவதும் கூடாது”

என்று சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார், திருச்சி தேசியக் கல்லூரியின் புதிய கட்டிடத்திற்குக் கால்கோள்விழா நடத்தியபோது தெரிவித்துள்ளார்.

உயர்தர தொழில் நுணுக்க நிலையம்

சென்னையில் ஏற்படுவது உறுதிதானா ?

புதுடில்லி, நவ. 18—

தென் மண்டல, வட மண்டல உயர் தொழில் நுட்ப நிலையங்களை முறையே சென்னையிலும், கான்பூரிலும் ஏற்படுத்துவதற்காக நுட்ப விவரத் திட்டங்கள், செலவு மதிப்பீடுகள், பாடத் திட்டங்கள் முதலியவைகளை வகுக்கும் பொருட்டு திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

“அந்த நிலையங்களை அமைப்பதற்காக சென்னை சர்க்காரும் உ. பி. மாநில சர்க்காரும் மனை இடங்களைத் தர முன்வந்திருக்கிறார்கள். அந்த மனை இடங்களின் தகுதி பற்றிப் பரிசீலித்த பின் கூடிய விரைவில் அது சம்பந்தமாக முடிவு செய்யப்படும் மேற்கு ஜெர்மனியிலிருந்தோ, அமெரிக்காவிலிருந்தோ எந்த சாதனங்களும் வரவில்லை. நிபுணத்துவ ஆசிரியர்களும் இன்னும் வரவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

மதுரை கல்லூரிகளில்!

தமிழ், கணித, இரசாயன ஆராய்ச்சிப் படிப்பு

மதுரை, நவ. 20—

அடுத்த கல்வி ஆண்டில் மதுரையிலுள்ள அமெரிக்கன் கல்லூரியில் இரசாயனம், மதுரைக் கல்லூரியில் கணிதம், தியாகராசா கல்லூரியில் தமிழ்—இவைகளில் ஆராய்ச்சிப் படிப்பு துவக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டிலிருந்து பொருளாதாரத்திலும் இந்த ஆராய்ச்சிப் படிப்பு ஏற்படுத்தப்படலாம் என்றும் தெரியவருகிறது.

திட்டமிடாத திட்டம்!

மீண்டும் ஆராயப்படும்

மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 20—

இந்தியப் பேரரசின் பேராசைத் திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி பற்றாக்குறை காரணமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் எந்த அளவு நிறைவேற்றப்படும் என்பது சந்தேகத்திற்கிடமாகி உள்ளது.

அந்நியச் செலாவணி வசதி தேவைப்படாத திட்ட இலக்குகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையையும் இழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

“பொருளாதார நிலை மாறி இருப்பதால் எல்லாத் திட்டங்களும் மீண்டும் ஆராயப்படும்” என்று, மக்கள்சபையில் அமைச்சர் மிஸ்ரா தெளிவாகப் பதிலளித்துள்ளார்.

“1958—59-ம் ஆண்டில், அந்நியச் செலாவணி வசதி இல்லாத காரணத்தினால் ஒரு சில திட்டங்கள் நிச்சயம் கைவிடப்படும்” என்று, அமைச்சர் தெரிவித்துள்ளார்.

“மத்திய அரசாங்க வருமானத்திலிருந்து ரூ. 47 கோடியை மாநிலங்களுக்குத் தரவேண்டும் என்று நிதிக் குழு கூறியுள்ள காரணத்தினால், மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் வேறு சில தொகைகள் குறைக்கப்படுவது பற்றி சனவரியில் முடிவு செய்யப்படும்”

என்ற தகவலும் மக்கள் சபையில் வெளியாகியுள்ளது.

நெய்வேலியிலும் கைவைக்க யோசனை!

புதுடில்லி, நவ. 20—

அந்நியச் செலாவணியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையின் காரணமாக சென்னை மாநிலத் திட்டங்களை நிறைவேற்றுவது பற்றி புதுடில்லியில், தென்னாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், மாநில முதலமைச்சர் காமராசர், மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் கலந்து பேசியுள்ளனர்.

எந்தத் திட்டத்திலும் பெரிய மாறுதல் இருக்காது என்று அறிவிக்கப்பட்டதாம்.

குந்தா, பெரியாறு திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றும், நெய்வேலி நிலக்கரி திட்டமும், மின்சாரத் திட்டமும் நிறைவேற்றப்படும் என்றும், ஆனால், நெய்வேலியில் உரத் தயாரிப்பு திட்டம் கைவிடப்படலாம் என்றும் கருதப்பட்டுள்ளது.

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலையைத் தனியார் துறையில் அமைப்பதா அல்லது அரசாங்கமே நடத்துவதாக என்பதையும் கூட்டம் ஆராய்ந்துள்ளது.

சேலம் மாக்னசைட் தொழிலுக்கு ஒரு நிறுவனம் (கார்பொரேஷன்) ஏற்படுத்துவது பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

நிதிக் குழு செய்துள்ள சிபாரிசுகளைப் பற்றிஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிட்டு, ‘சென்னைக்கு ஒதுக்கியது எதிர்பார்த்ததற்கு மாறாக உள்ளது’ என்று வருத்தம் தெரிவித்துள்ளனர்.

‘குறைவாக சாப்பிடுங்கள்’ என்ற காங்கிரசின் யோசனை!

சர்க்காரின் தோல்வியையும் கையாலாகாத்தனத்தையும் காட்டுவதாகும்

பெங்களூர், நவ. 19—

‘குறைவாகச் சாப்பிடுங்கள்’ என்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் யோசனைக்குப் பலத்த கண்டனம் கிளப்பப்பட்டிருக்கிறது.

“இந்த யோசனை, சர்க்காரின் தோல்வி மனப்பான்மையையும், கையாலாகாத்தனத்தையும் காட்டுவதாகும்” என்று, அகில இந்திய கிசான் சபையின் பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

“இந்த யோசனை, உணவு நெருக்கடிக்குப் பரிகாரமாகாது; நெருக்கடிக்கு, உற்பத்திப் பற்றாக்குறை மட்டுமல்ல காரணம்; உணவுத் தட்டுப்பாட்டிற்கும் விலை ஏற்றத்திற்கும், இவற்றில் கொள்ளை இலாபம் காண விரும்புகிறவர்களின் போக்குத்தான் பிரதான காரணம்” என்றும், என். பிரசாத ராவ் என்பவர் தமது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

துணி ஆலைகளில்

பணியாற்றுவோர் எண்ணிக்கை

புதுடில்லி, நவ. 18—

1957-ம் ஆண்டின் முதல் பத்து மாத காலத்தில் இந்தியாவிலுள்ள துணி ஆலைகளால் 444.7 கோடி கெச துணி தயாரிக்கப்பட்டிருக்கிறதாம்! முன் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் தயாரான அளவு 439.7 கோடி கெசம்.

“இந்தியத் துணி ஆலைகளில் 1956-ல் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 9,32,855; 1953-ல் அந்த எண்ணிக்கை 8,02,000 ஆகும்; 1957 முதல் எட்டுமாத காலத்தில் ஆலைகளில் வேலை செய்த தொழிலாளரின் சராசரி எண்ணிக்கை 9,50,256 ஆகும்” என்று, மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

‘காமன் வெல்த்திலிருந்து இந்தியா விலகவேண்டும்’

மக்கள் சபையில் காங்கிரஸ் உறுப்பினர் தீர்மானம்

புதுடில்லி, நவ. 19—

‘காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலகிக்கொள்ள வேண்டும்’ என்று கோரி தனி உறுப்பினர் கொண்டுவந்துள்ள தீர்மானம் மக்கள் சபையில் 29-ந் தேதியன்று விவாதிக்கப்படும் என்று தெரியவருகிறது.

இந்த பிரேரணையை காங்கிரஸ் உறுப்பினர் திரு. இரகுநாத் சிங் கொண்டுவர்துள்ளார்.

‘ரூபாய் மதிப்பை இழக்க நேரிடும்’

பந்த் அபாய அறிவிப்பு

கஷ்டங்களை உறுதியுடன் சமாளியுங்கள்!
மனச் சோர்வு அடையாதீர்!
நிலைமையை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள்!

இவ்வாறு மாநில நிதி அமைச்சர்களுக்கு உற்சாகமூட்டியுள்ளார் பண்டித பந்த்.

“மாநில நிதி அமைச்சர்கள் நிதி விஷயத்தில் அறிவாளிகளாக நடந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நாணயத்தின் மதிப்பு குறைந்துவிடும். ரொக்க வசதியைக் கவனித்து செயலாற்றுங்கள்” என்று அவர் மாநில நிதி அமைச்சர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

• “மாநிலங்களிலுள்ள ரிசர்வ் நிதியிலிருந்து பணத்தைச் செலவிடுவது சரியில்லை. மத்திய அரசாங்கத்திற்கும்—மாநில அரசாங்கத்திற்கும் திட்டமான ஏற்பாடுகள் இருக்கவேண்டும்” என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

ஆதம்பாக்கம்:

23—10—57-ல் ஆதம்பாக்கம் கிராமத்தில், தி. மு. கழகக் கிளை துவக்கவிழாவும், கட்டிடத் திறப்பு விழாவும் தோழர் தி. ந. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றன. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., தோழர்கள் என். எஸ். நாராயணன், கே. எஸ். புகாரி, ஜி. சனி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

வெட்டன்விடுதி:

28—10—57 இரவு 9-30 மணியளவில் கலைவாணர் திடலில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் இரா. தங்கமணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. வி. சுப்பையா, இரா. முகிலன், இயலரசன், சுந்தரக்கண்ணு முதலியவர்கள் பேசியபின், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழக இலட்சியங்களை விளக்கியும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும், வரியைக் கண்டித்தும் அரியதோர் உரையாற்றினர்.

பொதுச்செயலாளருக்கு ஏராளமான கைத்தறித் துணிகளும், மலர் மாலைகளும் பல கிளைகளின் சார்பில் அணிவிக்கப்பட்டன.

தோழர் மு. சின்னப்பாவின் ஆண் மகவிற்கு 'இளங்கோ' என்று பொதுச்செயலாளரால் பெயர் சூட்டப்பட்டது. அதன் நினைவாக சேலம் வழக்கு நிதிக்கு ரூ. 1-ம், மற்றும் துரைராஜ் சார்பில் ரூ. 1-ம், தங்கவேல் சார்பில் ரூ. 1-ம் அளிக்கப்பட்டது.

வாணியம்பாடி:

9—11—57 இரவு 9 மணிக்கு நகர தி. மு. கழகச் செயலாளர் கே. பி. சாமிநாதன் தலைமையில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருப்பத்தூர் நடேசன் இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

பின்னர் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேச எழுந்ததும், வாணியம்பாடி தி.மு. கழகம், சங்கராபுரம் கிராம தி. மு. கழகம்; காமராசபுரம் கழகத் தோழர்கள், அண்ணா படிப்பகத்தார், மேட்டுப்பாளையம் கழகத் தோழர்கள், பெரியபேட்டை கிளைக் கழகத் தோழர்கள், மின்னூர் பால் சங்கத்தார், இன்னும் பல தோழர்கள் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன; அடுத்து கிரிசமுத்திரம் எம். சி. கோபால கிருட்டினன் அவர்களின் 4 வயது சிறுவன், 61 வயது சிறுமி மாலைகள் அணிவித்து வணக்கம் தெரிவித்தனர்.

பொதுச்செயலாளர், பேசும் போது தி. மு. கழகம் நாட்டிற்கு இதுவரை என்ன செய்திருக்கிறது—என்ன செய்யப்போகிறது என்பதை விளக்கிப் பேசினார்.

நியாய அடிப்படையில் ஒப்படையுங்கள்

நியூகினியா உரிமை பற்றி ஐ. நா. சபைக்கு சுகர்னோ வற்புறுத்தல்

ஜாகர்தா, நவ. 19—

நியூகினியா டச்சுக்காரர்கள் வசம் உள்ளது. இந்தோனேஷியா நியூகினியாமீது ஆதிபத்திய உரிமை கோரியுள்ளது.

ஐ. நா. அரசியல் குழு அது பற்றி விவாதிப்பதென முடிவு செய்துள்ளது.

நியாய அடிப்படையில் ஆராய்ந்து நியூகினியாவை இந்தோனேஷியாவிடம் ஐ. நா. ஒப்படைக்கவேண்டும் என்றும், அப்படி ஐ. நா. செய்யத் தவறினால் பலாத்காரத்தின் மூலம் நியாயம் பெறப்படும் என்றும் இந்தோனேஷியத் தலைவர் சுகர்னோ தெரிவித்துள்ளார்.

கழகத் தோழர்கள் கவனத்திற்கு:

சென்னை நகரில் பூர்வாங்க வாக்காளர் பட்டியல்

சென்னை நகரத் தொகுதிகளுக்கான பூர்வாங்க வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சென்னை ரிப்பன் கட்டிடத்தில் இவற்றின் பிரதிகள் பார்வைக்காகக் கிடைக்கும். ஒவ்வொரு வட்டத்திற்கும் சம்பந்தப்பட்ட பட்டியல் பிரதிகள் எல்லா போலீசு நிலையங்களிலும், வாக்காளர் பதிவு அதிகாரி (சென்னை நகராட்சி ரெவின்யூ அதிகாரி) 1957 நவம்பர் 12-ல் குறிப்பிட்டிருக்கிற இடங்களிலும் பார்வைக்காகக் கிடைக்கும்.

பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு உரிய தகுதி உள்ளவர்கள்—ஆனால் சேர்க்கப்படாமல் விடுபட்டுப்போனவர்கள் பெயரைச் சேர்த்துக்கொள்ளும்படி மனுச் செய்யலாம். எந்த ஒரு பெயரைச் சேர்ப்பது குறித்தும் பட்டியலில் வேறு குறிப்புகள் பதிவாவதைக் குறித்தும், எந்த ஒட்டர் வேண்டுமானாலும் ஆட்சேபம் கிளப்பலாம். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ இந்தியக் குடியாக இருந்து, 1957 மார்ச் 1-ல் 21 வயதுக்கும் குறைவாகாமல் இருந்து, அந்தத் தேதியில் அப்பிரதேசத்திலுள்ள வீட்டில் வசித்து வந்தவராக இருந்து அல்லது வீட்டுக்கு உடையவராக இருந்து—வேறு தகுதிக் குறைவுகள் இல்லாமலும் இருக்குமானால்—அவர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு உரியவர் ஆவார்.

மனுக்களை, அச்சிடப்பட்ட 4-வது பாரத்திலும், ஆட்சேபங்களை 5-வது பாரத்திலும் அனுப்ப வேண்டும். சென்னை நகராட்சி கமிஷனர், அலுவலகத்திலிருந்து அந்த நமூனா பாரங்களை இலவசமாகப் பெறலாம். மனுக்களையும், ஆட்சேபங்களையும் (திருத்த அதிகாரியான) சென்னை நகராட்சி கமிஷனரிடம் அளிக்க வேண்டும்; அல்லது, பதிவுத் தபால் மூலம் அவருக்கு 3—12—57-க்குள் அனுப்ப வேண்டும். மனுவில், உரியவர் கையெழுத்திட்டிருக்க வேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டாலொழிய, அதை நேரிடையாகக் கொடுக்க வேண்டும்; அல்லது அதிகாரம் பெற்ற ஏஜெண்டு மூலம் கொடுக்க வேண்டும்.

நகர பிரிவு ஒன்றின் வாக்காளர் பட்டியலிலிருந்து வேறு ஒன்றுக்குத் தமது பெயரை மாற்றிக்கொள்ள விரும்பும் நபர், முந்திய பட்டியலில் தமது பெயர் இருப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும்; பின்னர், வேறு ஒரு பட்டியலில் தமது பெயரைச் சேர்த்துக்கொள்ள தனி மனு கொடுக்க வேண்டும்.

பட்டியலில் தகப்பனுடைய—அல்லது கணவருடைய பெயர் பற்றித் தவறாகத் தகவல் தரப்பட்டிருந்தாலும், எழுத்துப் பிழைகள் அச்சுப் பிழைகள் முதலியன இருந்தாலும், அவைகளைத் திருத்துவதற்காக, சென்னை நகராட்சி கமிஷனருக்கு, ஒரு கடிதம் மூலம் அது பற்றி அறிவிப்பது போதுமானது.

ஒவ்வொரு மனு அல்லது ஆட்சேபம் மீதும் திருத்த அதிகாரி விசாரணை நடத்துவார். மனுதார் அல்லது ஆட்சேபம் தெரிவித்த நபருக்கு தெரிவிக்கப்பட்ட இடம், தேதியில் அந்த விசாரணை நடைபெறும். மனுதார் அல்லது ஆட்சேபம் தெரிவிக்கும் நபர், தமது கூற்றுக்கு ஆதாரமான சாட்சிகளுடன் வரவேண்டும். அதன் பின் திருத்த அதிகாரியின் உத்தரவுப்படி, இறுதியான திருத்தங்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வாக்காளர் பட்டியல்கள் முடிவாக வெளியிடப்படும். அப்படி வெளியிடப்பட்டவுடனே ஒவ்வொரு தொகுதிக்கும் இறுதி வாக்காளர் பட்டியல் அமுலுக்கு வந்துவிடும்.

பண்டித நேருவின் பரிதாப நிலைமை

உள்நாட்டு நிதி வசதியைப் பெருக்க வேண்டும் என்கிறார்

புதுடில்லி, நவ. 19—

இந்தியப் பேரரசின் பேராசைத் திட்டத்திற்கு வெளிநாடுகளின் உதவி எந்த அளவுக்குக் கிடைக்கும் என்பது, பண்டித நேரு, உள்நாட்டு நிதி வசதியைப் பெருக்குவதில் எடுத்துக்கொண்டுள்ள அக்கறை காட்டுகிறது.

சிறு சேமிப்புகள் மூலம் நிதி திரட்டிவிடலாம் என்று போட்ட கணக்கு, நாட்டு மக்களின் உண்மை நிலையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

சமீப காலத்தில் சிறு சேமிப்புகள் குறைந்துவிட்டனவாம்!

மாநில நிதி அமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றி கவலைப்பட்டுள்ளனர்.

அதே கூட்டத்தில் பண்டித நேரு, இரண்டாவது திட்டத்திற்கு உள்நாட்டு நிதி வசதியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியுள்ளார்.

"அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்து ஓரளவுக்குத்தான் உதவி கிடைக்கும்" என்று கூறியுள்ளார்.

வெளிநாடுகளில் பயிலும் இந்திய மாணவர்கள்

எண்ணிக்கைபற்றி தகவல்

புதுடில்லி, நவ. 19—

1957 ஜனவரி 1-ந் தேதிவரை கிடைத்த தகவல்களிலிருந்து 5,298 இந்திய மாணவர்கள் வெளிநாடுகளில் கல்வி பயின்று வருகிறார்கள் என்று மக்கள்சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சிமெண்டின் விலை

குறைக்கப்படமாட்டாதாம்

புதுடில்லி, நவ. 18—

"ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டு இன்னும் இறக்குமதியாகாமல் இருக்கிற சிமெண்டு இறக்குமதிகளைத் தவிர, மற்றப்படி வெளிநாட்டு நாணயச் செலாவணி செலவாகக்கூடிய விதத்தில் சிமெண்டு எதுவும் புதிதாக இறக்குமதி செய்யப்படவில்லை" என்று, மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இறக்குமதிகள் குறைந்துவிட்டதன் காரணமாய் சிமெண்டின் விற்பனை விலையைக் குறைக்கும் உத்தேசமெதுவும் சர்க்காருக்கு இல்லையென்றும், சிமெண்டு உற்பத்திக்கான இரண்டாவது திட்ட இலட்சிய அளவைத் திருத்தியமைப்பதற்கான உத்தேசமெதுவும் தற்போது இல்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இலட்சத் தீவுக் குழந்தைகளுக்குக் கல்வி

புதுடில்லி, நவ. 18—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இலட்சத் தீவுகளிலுள்ள பள்ளி செல்லும் வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்!

இலட்சத் தீவுகளிலுள்ள மக்களில் சுமார் ஏழு சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றும், அங்கே ஒன்பது ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், ஆறு மருத்துவ மனைகளும் இருக்கின்றன என்றும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது. இப்போது இலட்சத் தீவுகளின் மக்கள் தொகை சுமார் 22,000.

தப்பித்துக்கொள்ளவா

இந்த முயற்சி?

"புதிய உலகங்களைப் பிடிக்கும் பொருட்டு புறவெளிக்குள் புதிய கோளங்களைப் புகுத்திக்கொண்டிருக்கிறோம். படைப்புக் காலந்தொட்டு நமது உறைவிடமாயிருந்துவரும் இந்த உலகத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்காமல், அவற்றினின்று தப்புவதற்காக இவ்வாறு புறவெளிப் பயணத்தை மேற்கொண்டுள்ளோமா?"

என்று, விவசாய நிறுவனத்தின் டைரக்டர் டாக்டர் பி. ஆர். சென், ரோம் நகரில் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

காவேரி (மில்) நகரில் தி.மு.க. பொதுக்கூட்டம்

கி. மனோகரன் கலந்துகொண்டார்

23—10—57 மாலை 6 மணியளவில் தோழர் துரைமதிவாணன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் வைத்தியலிங்கம் பேசியபின், தோழர் கி. மனோகரன் அவர்கள் திராவிடநாடு பிரிவினையின் அவசியம் குறித்தும், இந்திமொழித் திணிப்பைக் கண்டித்தும் கழக இலட்சியம் குறித்தும் பேசினார்.

தி. மு. க. கிளை சார்பிலும் பல மன்றங்கள் சார்பிலும் அவருக்கு மலர்மாலைகளும் கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் இந்தியை எதிர்த்தும், புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் 23-வது வட்ட தி.மு.க. பொதுக்கூட்டம்

சேலம்—அம்மாப்பேட்டை—23-வது வட்ட தி.மு.க. சார்பில் 17—11—57 மாலை தோழர் காதர் பாட்சா தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தி. மு. கழகம் எவ்வாறு அதி வேகமாக வளர்ச்சிபெற்று வருகிறது என்பதைப் பற்றியும், சட்டமன்றத்தில் தி. மு. கழகம் பணியாற்றி வருவதைப் பற்றியும், இந்தியை எதிர்க்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன் சிற்றுளி ஏ.சுப்பிரமணியம், எஸ். ஏ. அன்புக்கரசு, கே. ஆர். மாசிலாமணி, ஏ. மாரியப்பன் எம். சி., கே. எஸ். மணி ஆகியவர்கள் விரிவாகப் பேசினர்.

ஆம்பூரில் வள்ளுவர் விழாப் பொதுக்கூட்டம்

10—11—57 மாலை ஆம்பூர் திருவள்ளுவர் கழகச் சார்பில், சந்தை சதுக்கத்தில், திருவள்ளுவர் விழாப் பொதுக்கூட்டம் நகராண்மைக் கழகத் தலைவர் நடேசன் தலைமையில் நடைபெற்றது; தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர்கள் சம்பங்கி, அன்னையன், நாகை புகழேந்தி ஆகியோர் பேசியபின், தோழர் க. அறிவழகன் அவர்கள் குறளின் அருமை பெருமைகளை விளக்கினார். குறளை இன்று பலரும் கையாளும் முறைகளையும், நாட்டு மக்கள் உள்ளத்தில் குறள் இடம் பெறத் துவங்கியவுடன் வைதீகர்களும், உரிமை கொண்டாட முயற்சிக்கும் நிலையினையும், வள்ளுவர் கழகத்தார் செய்யவேண்டிய கடமை, 'குறள் விழா' நடத்துவது மட்டுமல்ல—தமிழுக்குத் தீங்கு வருகின்ற நேரத்திலெல்லாம் எதிர்த்துப் போரிடவேண்டிய உள்ளவுறுதி பெறவேண்டும் என்பதையும், அரசியலாரைக் கண்டு அஞ்சாமல் ஆசிரியர்கள் ஆங்காங்கு குறள் வகுப்புக்கள் நடத்துவதில் ஈடுபடவேண்டும் என்பது பற்றியும் விளக்கமாகப் பேசினார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

சேலம்:

சேலம் ஜலால்புர மைதானத்தில் 10—11—57 மாலை தோழர் எம். பி. ரஷீத் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் பேசுகையில் தி. மு. கழக வளர்ச்சி குறித்தும், இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில், தென்னாட்டில் இந்தியைப் புகுத்த வடநாட்டு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருவதைக் கண்டித்தார். தென்னாட்டில் இந்தி புகுத்தப்பட்டால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றும், ஆகவே தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இந்தியை விரட்ட வேண்டும் என்றும், இந்தி எதிர்ப்புக்கு எல்லோரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தி. மு. கழகம் நாளுக்குநாள் வெகு வேகமாக வளர்ச்சி பெற்று மக்களிடம் பேராதரவை அடைந்து வருவதைக்கண்டு மாற்றுக் கட்சியினர் பொறுமை அடைந்து வருகின்றனர் என்றும், மக்களுக்குப் பணி புரிவதே முக்கிய கொள்கையாகக்கொண்டு தி. மு. கழகம் செயலாற்றிவருகிறது என்றும் குறிப்பிட்டார்.

தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு, மற்றும் பலரும் பேசினர்.

மோகூர்:

கள்ளக்குறிச்சிவட்டம் மோகூர் தி. மு. கழகக் கிளையின் முதல் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் மு. அந்தாளம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் சுந்தரம், மா. தங்கவேலன், மு. பாண்டியன் ஆகியோர் கழகக் கொள்கைகளைப் பற்றிப் பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், இந்தி புகுத்தப்படுவதைக் கண்டித்தும், திராவிட நாடு ஏன் பிரிய வேண்டும் என்பதைப்பற்றியும் விளக்கமாகப்பேசினார்.

பேச்சாளர்களுக்கு கழகச் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

விருகாவூர்:

கள்ளக்குறிச்சி வட்டம் விருகாவூர் தி. மு. கழகக் கிளை துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மா. தங்கவேலன், நாராயணசாமி, மு. பாண்டியன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், மத்திய சர்க்காரால் கொண்டுவரப்படும் இந்தியை எதிர்த்து எந்த விதத் தியாகமும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்றும் பேசினர்.

பின்னர் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிடநாடு ஏன் பிரியவேண்டும் என்பது பற்றியும், சாதிப் பிரிவினைகளால் நடந்த சம்பவங்கள் பற்றியும், மத்திய சர்க்காரால் வலுக்கட்டாயமாக இந்தி தமிழ்நாட்டில் புகுத்தப்படுமானால் யாவரும் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டிய நிலையைப் பற்றியும் பேசினார்.

பேச்சாளர்களுக்குக் கழகச்சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

ஆராய்ச்சிக்காக 84,649 குரங்குகள் ஏற்றுமதியாம்!

ஆராய்ச்சிக்காகவும், இளம் குழந்தைகளின் வாதத்தடுப்பு மருந்து தயாரிப்பதற்காகவும் இந்த ஆண்டு சனவரி திங்கள் முதல் ஜுன் வரையில், 84,649 குரங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் கேள்வி நேரத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் வேலை நிறுத்தம்

போக்குவரத்து வசதிகள் நிலைநின்று விட்டனவாம்

கொழும்பு, நவ. 20—

மின்சார இலாகா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதின் காரணமாக இன்று சுமார் 5 மணி நேரம், மின்சார வசதி இல்லாமல் போய்விட்டது.

சுமார் 10,000 இரயில்வே தொழிலாளர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்க மின்சார ஊழியரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இன்று காலை முதல் இரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதென்றும் படகு வசதியும் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் செய்திகள் கூறுகின்றன.

தெருக்களில் நிறுத்தப்பட்டுள்ள பஸ்கள் மட்டும், அவைகள் தங்குமிடத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டனவாம்.

புகைவண்டிகள், இரயில்வே நிலையங்களில் கேட்பாரற்று நின்று கொண்டுள்ளனவாம்.

கேட்டீரா சேதி!

மாஸ்கோ, நவ. 19—

ரஷ்யாவில் ஒரு செயற்கைக் கடல் தோன்றப்பட்டிருக்கிறது என்றும், இதன் வழியாக சினுவிகிருந்து ஆர்க்டிக்கில் உள்ள 'காரா' கடலுக்கு நேரடிக் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடல் 373 மைல் நீளம் உள்ளதாம். இதற்கு புக்தர்மா என்று பெயரிடப்பட்டுள்ளதாம். அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் இக்கடலில் தண்ணீர் விடப்படுமாம்.

சென்னை மாநிலத்தில் உணவு நிலைமை

ஒரு கண்ணோட்டம்

சென்னை, நவ. 21—

அக். 31-ம் நாளுடன் முடிந்த இரண்டு வாரங்களில், முதல் பாதியில் வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், கோவை மாவட்டங்களில் இலேசான மழையும், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் பலத்த மழையும், சென்னை, செங்கற்பட்டு, நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகப் பலமான மழையும் இருந்தது.

இந்த இருவாரங்களின், பிற்பகுதியில் செங்கற்பட்டு, வடார்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களில் பலத்த மழையும், சென்னை, தென்னார்க்காடு, தஞ்சை, இராமநாதபுரம், கோவை, நீலகிரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மிகப் பலமான மழையும் இருந்தது.

வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி மாவட்டங்கள் தவிர, ஏனைய எல்லா மாவட்டங்களிலும் போதுமான தண்ணீர் விநியோகம் இருந்தது.

விளைபயிர் நிலவரம்:

செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சை மாவட்டங்களில் சில பகுதிகள் தவிர எல்லா மாவட்டங்களிலும் விளைபயிர் நிலைமை பொதுப்படையில் சுமாராக இருந்தது.

மகசூல் நிலைமை:

நெல்—தஞ்சை மாவட்டத்தில் நெல் அறுவடைப் பரப்பளவு அதிகம். சேலம், செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி, மதுரை, கோவை மாவட்டங்களில் நெல் அறுவடைப் பரப்பளவு அதிகம் இல்லை. மகசூல் சேலம், தஞ்சை மாவட்டங்களில் சாதாரணமாக இருந்தது; இதர மாவட்டங்களில் சுமார்.

ராகி—சேலம், கோவை மாவட்டங்களில் ராகி அறுவடைப் பரப்பளவு அதிகம் இல்லை; இந்த இரு மாவட்டங்களிலும் இதன் மகசூல் சுமார்.

தமிழ் நாட்டில் சிறு தொழில் வளர்ச்சி

டெல்லி தரும் உதவியின் இலட்சணமே இலட்சணம்!

புதுடில்லி, நவ. 20—

திண்டுக்கல்லில் பூட்டு தயாரிப்பு, தோல் உற்பத்தி கூட்டுறவுத் தொழிற்சாலை!

சென்னை திருவல்லிக்கேணி, பெரம்பூர் பகுதிகளில் தோல் கூட்டுறவு அமைப்புகள்!

பவானியில் இரண்டு வார்ப்படத் தொழிற்சாலைகள்! ஈரோட்டில் 'போல்ட்' உற்பத்தி!

மன்னார்குடியில் தச்சு, கொல்லர் பட்டறைகள்!

நெல்லையில் கூட்டுறவு மரத் தொழிற்சாலை!

திருவல்லிக்கேணியில் அப்பளத் தொழில்!

இவைகளுக்காக மத்திய சர்க்காரம் சென்னை மாநிலத்திற்கு ரூ. 12·4 இலட்சத்தை, சிறு தொழில் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அளித்துள்ளது.

அமராவதி நீர்த்தேக்கம்

21,000 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் வசதி கிடைக்கும்

உடுமலை, நவ. 21—

1954-ம் ஆண்டு துவக்கப்பட்ட அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் முடிவடைந்து, இந்தத் திங்கள் 15-ம் நாள் முதல் தண்ணீர் விடப்பட்டுள்ளது. பெரிய கால்வாயின் நீளம் 39 மைல். இத்துடன் 50 மைல் நீளத்திற்கு கிறுகால்வாய்களின் மூலம் 21,000 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் வசதி இந்த திட்டத்தின்மூலம் கிடைக்கும்.

பாம்பன் கடலில் ஊஞ்சல் பாலமாம்!

திட்டம் நிறைவேறுமா?

மதுரை, நவ. 21—

தூத்துக்குடியிலிருந்து இராமநாதபுரத்திற்குக் கடற்கரையோரமாகப் போடப்பட்டுவரும் சாலை இன்னும் ஓராண்டு காலத்தில் பூர்த்தியாகிவிடும் என்று தெரியவருகிறது.

6,800 அடி அகலமுள்ள பாம்பன் கடலில் இரயில்வே தொங்கு பாலத்தையொட்டி, வண்டி போக்குவரத்துக்கான பாலம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க துப்புரவு, மதிப்பீடு வேலைகள் முடிவடைந்துள்ளன என்று சாலைகளின் தலைமை பொறியியல் அதிகாரி திரு. நம்பியார் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடி வரை 10 மைல் சாலை அமைப்பது பற்றியும், பாம்பன்—இராமேசுவரம் சாலையைச் சரி செய்வது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 110 இலட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து

சென்னை, நவ. 21—

அக்டோபரில் சென்னை நகரில் நாள் ஒன்றுக்கு சராசரி 328 பஸ்கள் (விடுமுறை நாட்களில் 290 பஸ்கள்) ஓடின. பிரயாணம் செய்தவர்கள் 1, 10,46,522 பேர்; மொத்தம் பிரயாண மைல்கள் 11,74,589; வசூலான கட்டணம் ரூ. 14,06,393—முந்தின மாத வசூலுடன் ஒப்பிடும்போது இது ரூ. 16,363 குறைவு. சென்ற ஆண்டில் இதே மாதத்தின் வசூலுடன் ஒப்பிடுகையில் வசூல் சுமார் ரூ. 1-இலட்சம் அதிகமாகும்.

இந்த மாதத்தில் வழிகளில் அதிகமான பஸ்கள் ஓடியதால், மொத்த மைல் விகிதம் அதிகரித்தது. சென்னை நகரில் அரசாங்க பஸ் போக்குவரத்தின் மொத்த பஸ்கள் 361 ஆகும்.

பெரியார் மீது வழக்கு

செஷன்ஸ் நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவு

திருச்சி, நவ. 21—

பெரியார் அவர்கள் மீது இங்கு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினை விசாரித்த வி. ஆர். வேணுகோபாலாச்சாரி, பெரியார் அவர்களை செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்ப உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

குளித்தலை, பசுபதிபாளையம், திருச்சி ஆகிய ஊர்களில் முறையே அக். 5, 13, 20-ந் தேதிகளில் பெரியார் அவர்கள் பேசிய பேச்சுக்கள் பற்றிய மூன்று குற்றச்சாட்டுகளையும் நீதிபதி வாசித்துக்காட்டினர் என்றும், பெரியார் அவர்கள் எதிர்வழக்காட விரும்பவில்லை என்று தெரிவித்ததாகவும், அதன்பேரில் இ. பி. கோ. 323, 324, 326, 436, 302, 117 ஆகிய பிரிவுகளின்படி அவர் குற்றம் இழைத்திருப்பதாக நீதிபதி அவர்கள் கருதி, பெரியார் அவர்களை செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பியுள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்ட தன்னிடம் அன்புடனும், மரியாதையுடனும் நடந்துகொண்ட நீதிமன்றத்தவருக்கும், போலீசாருக்கும், பெரியார் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

பொன்னம்பலனார்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்னை 2-வது வட்டத் தி. மு. கழகம்—சி. ஆர். அருச்சுனன், கோ. நீலமேகம்; நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றம் — அன்புரோசு; 4-வது வட்டத் தி. மு. கழகம்—ஆர். எஸ். கோவிந்தசாமி; 5-வது வட்டத் தி. மு. கழகம்—இரா. இளந்தென்றல்; 7-வது வட்டம் அம்பேத்கார் மன்றம், கே. வீ. கே. சாமி படிப்பகம்—இராசு; 8-வது வட்டத் தி. மு. கழகம்—கே. எஸ். தினகரன்; 11-வது வட்டத் தி. மு. கழகம்—து. தமிழ்ச்செல்வன்; முத்தமிழ் மன்றம் — எஸ். இராமதாசு; என். எஸ். கே. நினைவு மன்றம்—கிருஷ்ணசாமி; 19-வது வட்டத் தி. மு. கழகம்—டி. நடராசன், வேலாயுதம்; 20-வது வட்ட அறிவு வளர்ச்சி மன்றம்—கன்னியப்பன்; 27-வது வட்டத் தி. மு. கழகம்—டபிள்யூ. பி. பி. சுந்தரம்; 37-வது வட்டம்—கோ. இளவரசு; முத்தமிழ் முன்னேற்ற மன்றம்—பக்தவத்சலம், வெற்றிவீரன்; மற்றும் பலர் துறைமுகம் வந்து மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்துச் சிறப்பித்தனர்.

(ந. கி.)

2-ம் திட்டத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் சொல்லியிருக்கவேண்டும்; ஆனால், சொல்லாதது கண்டு வருந்துகிறேன்."

★

மகாவீர் தியாகி (காங். உ. பி. முன்னாள் மத்திய மந்திரி):—

"சர்க்கார் தங்களின் தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும்; உள்நாட்டு நிதி நிலைமை படுமோசமாகி வருகிறது—அழியும் தருவாயிலிருக்கிறது. இதற்கு யாராவது ஒரு மந்திரி பொறுப்பேற்றுத்தானாக வேண்டும். இந்த அவலநிலை பற்றி திட்டக்குழு விசாரிக்க வேண்டும்; முன்னர் சொன்னதற்கு மாறாக எல்லா மாநிலங்களும பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களை தயாரிக்கின்றன.

"சிறு சேமிப்பு முதலியனவும் இலட்சிய எல்லையை அடையவில்லை.

"அன்னியச் செலாவணி நிலையோ வேகமாக மோசமாகி வருகிறது. இந்த நிலையில், திட்டத்தை எப்படி நிறைவேற்றப்போகிறார்கள் என்று தெரியவில்லை."

மற்றும், நஷீர் பரூச்சா, ஆர். கே. காடில்கார் முதலிய பலரும் திட்டத்தின் அலங்கோலம் பற்றிக் கண்டித்திருக்கின்றனர்.

முத்துப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் இரா. நெடுஞ்செழியன்

23—11—57 காலை 9-30 மணியளவில் முத்துப்பேட்டை கழக உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் சார்பில் நடக்கும் சிறப்புக்கூட்டத்தில் தி.மு.க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' குறித்துச் சொற்பொழிவாற்றுவார்; திரு. எஸ்.எம். சாகுல் அமீது தலைமை தாங்குவார்.

திருப்பூர் 16, 17-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு

23—11—57 இரவு 7 மணிக்கு மேற்படி வட்ட பொது உறுப்பினர் கூட்டம் கருவப்பாளையம் மங்கலம் ரோடு வளளுவர் படிப்பகத்தில் நடைபெறும்.

தொழுர் மஜீத் மன்ற உறுப்பினர்களுக்கு:

22—11—57 மாலை 7 மணிக்கு தொழுர் (தஞ்சை மாவட்டம்) மஜீத் மன்ற இலவச படிப்பகத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் செயலாளர், துணைச்செயலாளர் தேர்வு நடைபெறும்.

அ.இ. புகைவண்டி நிலைய அதிகாரிகள் மாநாடு

நவம்பர் 24, 25 ஆகிய தேதிகளில் சென்னை பூங்காநகர் மெமோரியல் மண்டபத்தில், அகில இந்திய புகைவண்டி நிலைய அதிகாரிகள், துணை அதிகாரிகள் (எஸ். எம்.-ஏ. எஸ். எம்.) திரு. பி. எஸ். மூர்த்தி, எம். பி., தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூர், சிவாஜிநகர் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

23—11—57 மாலை 7 மணியளவில், பெங்களூர் சிவாஜிநகர தி. மு. க. கிளை பணிமனையில் செயற்குழுக்கூட்டம் நடைபெறும். தமிழ் விழாவின் வரவு செலவுக் கணக்கு மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

வில்லிவாக்கம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

23—11—57 பிற்பகல் 3 மணியளவில் வில்லிவாக்கம் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் ஒற்றைவாடை தெரு 3 எண்ணுள்ள தோழர் மு. சு. மணி இல்லத்தில் கூடும். வரவு-செலவு மற்றும் முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

க. அன்பழகன்

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

நவம்பர்

22: மாலை 4-30 மணி-சேலம் கல்லூரி;
மாலை 6-30 மணி-சாக்கப் பிள்ளையூர்.

23: மாலை 3 மணி-கடத்தூர்;
மாலை 6-30 மணி-வெங்கட சமுத்திரம்.

24: மாலை 5 மணி-உத்தம சோழபுரம் (பெரியூர்).
இரவு 8 மணி-ஆட்டையாம் பட்டி.

25: சென்னை.

மெஷின்மென் தேவை

'நம் நாடு' அலுவலகத்திற்கு நல்ல தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற அச்சுப்பொறி இயக்குநர் (மெஷின் மென்) தேவை. கீழ்க்கண்ட முகவரியில் நேரில் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி: 'நம் நாடு'
சென்னை-13.

கழகக் கூட்டங்கள்

★

வெங்கடசமுத்திரம்
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
அழகிரி திடலில்
23—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஏ. விருத்தாசலம்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
(தோழர் வி. ஆர். இராமு தலைமையில் தலைவர் இல்லத்திலிருந்து ஓர் ஊர்வலம் புறப்பட்டு அழகிரி திடலையடையும்)

★

முரப்பநாடு (நெல்லை)
வள்ளுவர் திடலில்
23—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஏ. சாமிநாதன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
எம். எஸ். அரியமுத்து
எல். புதியமுத்து

★

கடத்தூர்
சந்தைத் திடலில்
23—11—57 மாலை 3½ மணிக்கு
தலைவர்: டி. கந்தசாமி
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
இரா. சேகநாதன்
டி. சந்தசாமி

★

ஏனாதி
(தஞ்சை மாவட்டம்)
வள்ளுவர் அரங்கில்
23—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: அ. சிதம்பரம்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

சென்னை 37-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்களுக்கு:

13—11—57 இரவு 8 மணியளவில் இராயப்பேட்டை, சீனிவாசபுரம் 2-வது தெரு 45 எண்ணுள்ள இல்லத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அவ்வமயம் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

ஆதிவராகநத்தம் அறிவொளி மன்றத் திறப்புவிழா

23—11—57 மாலை 4 மணிக்கு ஆதிவராகநத்தம் கடைவீதியில் மேற்படி விழா திரு. டி. சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும். தோழர் அறிவுடைநம்பி மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

பெங்களூரில் க. அறிவழகன் நிகழ்ச்சிகள்

23—11—57 பிற்பகல் 3-மணிக்கு மினர்வாமில் திடலில் கூட்டம்.
மாலை 5-மணிக்கு சட்டக் கல்லூரி கூட்டம்.
மாலை 6-மணிக்கு சிவன் செட்டி வட்டாரம் பொதுக்கூட்டம்.
இரவு 8-மணிக்கு பின்னிமில் எதிரில் கூட்டம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடம் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.